கரும்பு டன்னுக்கு ரூ. 3,000 விலை நிர்ணயிக்க வலியுறுத்தல்

First Published : 03 Jul 2012 01:04:13 PM IST

நாமக்கல், ஜூலை 2: கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரம் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மோகனூர் சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் மோகனூரில் திங்கள்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் எஸ்.பி. கந்தசாமி தலைமை வகித்தார். பொதுச் செயலர் வழக்குரைஞர் என்.கே. நடராஜன் ஆண்டறிக்கை வாசித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம்:

2012-13-ம் அரைவையாண்டில் கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 3 ஆயிரம் என அரசு விலை நிர்ணயம் செய்யவேண்டும். கரும்பு வெட்டுக் கூலி, வாகன வாடகை முழுவதையும் ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

கரும்பு வெட்டுக் கூலி அரைவையாண்டு முழுவதும் ஒரே சீராக கட்டுக்குள் இருக்க ஆலை நிர்வாகம் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கவும், கூலியாள்கள், கொத்துக்காரர்களுக்கான ஊக்கத் தொகையை விவசாயிகளிடம் கலந்தாலோசித்து ஆலை நிர்வாகம் நிர்ணயிக்க வேண்டும்.

உரிய காலத்தில் கரும்பை ஆலை நிர்வாகம் வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

சர்க்கரை ஆலை நிர்வாகம் ஒவ்வொரு அரவை ஆண்டு முடிவிலும் விவசாயிகள் வழங்கிய மொத்த கரும்பு எடை, கிரையம், பணப் பட்டுவாடா, பிடித்தம் ஆகியவற்றின் விவரங்கள் அடங்கிய கணக்கு அறிக்கைகளை தவறாமல் வழங்கிட வேண்டும். கரும்புக்கு நடவு மானியம், தோகை உரிக்க மானியம் வழங்கிடவும் தமிழக அரசின் சர்க்கரைத் துறை ஆணையரகம் தகுந்த உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும்.

கடுமையான உரத் தட்டுப்பாட்டை போக்கி சீரான உர விநியோகம் செய்திடவும், கடும் உர விலையேற்றத்தை குறைக்கவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆண்டுதோறும் விவசாயிகள் வழங்கிய கரும்பு டன்னுக்கு 1 கிலோ சர்க்கரையும், ஆலை சங்கத்தினர்கள் பங்கு மூலதனம் ஒன்றுக்கு அரை கிலோ சர்க்கரையும் மானிய விலையில் வழங்கவேண்டும்.

நாட்டுக்கு அன்னியச் செலவாணி மிச்சப்படுத்தவும், கரும்பு விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைத்திடவும் எத்தனாலை பெட்ரோலுடன் கலந்து விற்கும் திட்டத்தை மத்திய அரசு

உடனடியாக அமல்படுத்த வேண்டும். அத்துடன், மோகனூர் சர்க்கரை ஆலை சார்பில் கட்டப்பட்டு பல ஆண்டுகளாக உற்பத்தி தொடங்காமல் உள்ள எத்தனால் ஆலையை உடனடியாக இயக்கவும் வேண்டும்.
ஆலை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, பாலிடெக்னிக் கல்லூரி வளர்ச்சிக்காக ஆண்டுதோறும் குறிப்பிட்ட நிதியை ஆலை நிர்வாகம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
தொடர்ந்து, புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். அதன்படி, சங்கத்தின் புதிய தலைவராக எஸ்.பி. கந்தசாமி, பொதுச் செயலராக வழக்குரைஞர் என்.கே. நடராஜன், பொருளாளராக கே.எஸ். வரதராஜன், துணைத் தலைவர்களாக டி.பி. எட்டிக்கன், என். தங்கவேல், துணைச் செயலர்களாக கே. கனகராஜ், பி. நவலடி மற்றும் 8 நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

## விதைகள் குறித்த புகார்களுக்கு...

First Published : 03 Jul 2012 01:19:35 PM IST

கோவை, ஜூலை 2: விதை தொடர்பான பிரச்னைகள் குறித்து விவசாயிகள் புகார் தெரிவிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
விதைப்புக்கு வாங்கிய விதைகள் தொடர்பாக பிரச்னைகள் இருந்ததால் தங்களது பகுதி விதை ஆய்வு துணை இயக்குநர், விதை ஆய்வாளரிடம் எழுத்து மூலம் புகார் தெரிவிக்கலாம். அவ்வாறு புகார் அளிக்கும் போது விதை வாங்கியதற்கான பட்டியல், சான்று அட்டை, விவர அட்டை, விதை ஆகியவற்றை அளிக்க வேண்டும்.
மேலும் விவரங்களுக்கு 0422-2432984 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்று விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநர் ஆ.கோபால் தெரிவித்துள்ளார்.

## விவசாயிகள் பெயரில் மானியம் பெறும் வியாபாரிகள்!

First Published : 03 Jul 2012 01:19:07 PM IST

உதகை, ஜூலை 2: நீலகிரி மாவட்டத்தில், விவசாயிகள் என்ற போர்வையில் வெளிமாநில வர்த்தகர்கள் சிலர் கொய்மலர் சாகுபடியில் ஈடுபட்டு, அரசின் மானியங்களைப் பெற்று வருவதாக புகார் எழுந்துள்ளது.
கடந்த 12 ஆண்டுகளுக்கு முன் நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழில் நலிவடைந்தது. அப்போது மாற்று முயற்சியாக கொய்மலர் சாகுபடியை அதிமுக அரசு மாவட்டத்தில்

அறிமுகப்படுத்தியது. மலர் சாகுபடியில் ஈடுபடுவோருக்கு 50 சதவீத மானியம், தொழில் தொடங்க வங்கிக் கடன் என பல வகைகளிலும் விவசாயிகள் ஊக்குவிக்கப்பட்டனர். இதனால் ஏராளமானோர் இத்தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டினர்.

இந்நிலையில், உற்பத்தி செய்த மலர்களுக்கு சந்தை வசதியில்லாமை, விலை கிடைக்காமை, தரமற்ற விதைகள் போன்ற பிரச்னைகளால் இத்தொழில் நலிவடையத் தொடங்கியது.

கொய்மலர் விற்பனைக்கென பிரத்யேகமாக உதகையில் தொடங்கப்பட்ட மலர் ஏல மையம் செயல்பட முடியாமல் போனது. இதனால் கொய்மலர் சாகுபடிக்காக வங்கிகளிடமிருந்து கடன் பெற்ற விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் அவதிப்பட்டனர்.

இத்தகைய சூழலில், சிறு விவசாயிகள் திணறி வருவதை சாதகமாகப் பயன்படுத்தி, வெளி மாநிலங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள் சிலர் பசுமைக் குடில்களை குறைந்த விலைக்கு வாங்கி, அதன் பேரில் வரும் மானியங்களைப் பெறுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பாக நீலகிரி மாவட்ட மலர் சாகுபடி சிறு விவசாயிகள் சங்கத் தலைவர் விசுவநாதன் தமிழக முதல்வருக்கு புகார் மனு அனுப்பியுள்ளார்.

கொய்மலர் சாகுபடி இன்னும் லாபகரமான தொழிலாக விளங்குவதாக ஒரு பிரிவினரும், பெறுவதை விட இழப்பதே அதிகம்; எனவே, வங்கிகளில் இருந்து வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மற்றொரு பிரிவினரும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில், அரசின் மானியத்தைப் பெற விவசாயிகள் அல்லாத சிலரும் இத்தொழிலில் நுழைந்துள்ளது தங்கள் நிலையை மேலும் மோசமடையச் செய்யும் என்கின்றனர் நீலகிரி மாவட்ட சிறு விவசாயிகள்.

அரசு இதைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## வரும் 2012-13ம் பருவத்தில்... சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும்

ஜூலை 04,2012,00:53



புதுடில்லி:வரும் 2012-13ம் சந்தை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்), நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னாக குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, நடப்பு பருவத்தின் உற்பத்தியை விட, 10 லட்சம் டன் குறைவு என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா) தெரிவித்துள்ளது.

**பருவ மழை:**தென் மேற்கு பருவ மழை காலதாமதமாகி வருகிறது. இதுவரையிலுமாக, பருவ மழை, 31 சதவீதம் குறைவாக உள்ளது. எனவே, வரும் சர்க்கரை பருவத்தில், இதன் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. இருப்பினும், பருவ மழை நல்ல அளவில் இருக்கும் நிலையில், இந்த மதிப்பீட்டில் மாற்றம் ஏற்படக்கூடும்.வட மாநிலங்களில், பருவ மழை நன்கு உள்ளதால், அம்மாநிலங்களில், கரும்பு சாகுபடி நன்கு இருக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது.

ஆனால், அதிகளவில் கரும்பு விளையும் மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில், மழை பொழிவு குறைவாகவே உள்ளது. இதனால், கரும்பு பிழி திறனும் குறையக் கூடும் என, எதிர்பார்க்கப்படுகிறது.நடப்பு பருவத்தில், நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.60 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரையிலுமாக, 2.57 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகியுள்ளது. எனவே, நடப்பு பருவத்தின் இறுதிக்குள், நிர்ணயிக்கப்பட்ட இலக்கு எட்டப்படும்.

எதிர் வரும் 2012-13ம் பருவத்தில், கரும்பு சாகுபடி பரப்பளவு, 52.22 லட்சம் ஹெக்டேராக

அதிகரிக்கும் என, புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. இது, நடப்பு பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட சாகுபடி பரப்பளவை விட, 2.30 லட்சம் ஹெக்டேர் (49.92 லட்சம் ஹெக்டேர்) அதிகமாகும்.வரும் சர்க்கரை பருவத்தில், சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக இருக்கும். இதில், உத்தரபிரதேசம் மாநிலத்தின் பங்களிப்பு, 78 லட்சம் டன் என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மகாராஷ்டிரா (76 லட்சம் டன்), கர்நாடகா (30 லட்சம் டன்), தமிழகம் (25 லட்சம் டன்), குஜராத் மற்றும் ஆந்திரா (தலா 10 லட்சம் டன்) ஆகிய மாநிலங்களுடன், இதர மாநிலங்களில் மீதமுள்ள சர்க்கரை உற்பத்தியாகும் என, "இஸ்மா' அமைப்பு தெரிவித்துள்ளது.

**மகாராஷ்டிரா:**தென் மாநிலங்களை விட, வட மாநிலங்களில், கரும்பு உற்பத்தியும், கரும்பு பிழி திறனும் நன்கு இருக்கும். தென் மேற்கு பருவ மழை, தீவிரம் அடையும் நிலையில், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களிலும், கரும்பு உற்பத்தி நன்கு இருக்கும் என தெரிகிறது.கர்நாடகா, தமிழகம் ஆகிய மாநிலங்களில், ஆலைகளுக்கு கரும்பு வரத்து சீராக உள்ளது. எனவே, அடுத்த மூன்று மாதங்களுக்குள், 30 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்படும். இதனால், நடப்பு பருவத்திற்கான இலக்கு சுலபமாக எட்டப்படும்.

நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னாக இருந்தால் கூட, அது உள்நாட்டு தேவையை விட, அதிகமான அளவாகும். தற்போதைய நிலையில், உள்நாட்டில் சர்க்கரை பயன்பாடு, 2.20 கோடி டன் என்றளவில் உள்ளது. எனவே, மீதமுள்ள சர்க்கரையை, நாம் ஏற்றுமதி செய்ய முடியும் என, "இஸ்மா' அமைப்பின் தலைமை பொது செயலர் அபினாஷ் வர்மா தெரிவித்தார்.

**ஏற்றுமதி:**கடந்த இரண்டு ஆண்டுகளாக, ஒட்டுமொத்த அளவில், சர்க்கரை உற்பத்தியும், கையிருப்பும் நல்ல அளவில் உள்ளது. நடப்பு சர்க்கரை பருவம், செப்டம்பர் மாதத்துடன் முடிவடைய உள்ளது. அம்மாத இறுதிக்குள், நாட்டின் சர்க்கரை ஏற்றுமதி, 35 லட்சம் டன்னை எட்டும். வரும் ஆண்டிலும், நாட்டின் சர்க்கரை ஏற்றுமதி, சிறப்பாக இருக்கும் என, "இஸ்மா' தெரிவித்துள்ளது.

## பால் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை: அமைச்சர்

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,02:01 IST

திருவண்ணாமலை: "கூட்டுறவு பால் உற்பத்தி சங்கங்களின் பிரதிநிதிகளின் குறைகளை கேட்டறிந்து, உற்பத்தியை பெருக்க கறவை மாடுகள் வாங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்," என பால்வளத்துறை அமைச்ச மூர்த்தி கூறினார்.

செங்கம் அடுத்த அம்மாபாளையத்தில் வேலூர், திருவண்ணாமலை மாவட்டம் பால்

உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம், 39.52 எக்கர் நிலப்பரப்பில், 2 லட்சம் லிட்டர் பால் கொள்திறன் கொண்ட கலன் அமைத்தல், 2 மெட்ரிக் கடன் பால்பவுடர் தயாரித்தல் ஆகிய தொழிற்சாலை, 60 கோடியே 18 லட்ச ரூபாய் மதிப்பில் தமிழக அரசும் தேசிய பால்வளம் வாரியம் இணைந்து கட்டிடங்களை கட்டி வருகின்றன. இதற்கான கட்டுமான பணி நடந்து வருகிறது.

இதில், பால்பவுடர் தொழிற்சாலை கட்ட, 40 கோடி ரூபாய் தேசிய பால் வாரியம் வழங்கியுள்ளது. இந்த கட்டுமானப்பணிகளை பால்வளத்துறை அமைச்சர் மூர்த்தி, தகவல் தொழி நுட்பத்துறை அமைச்சர் முக்கூர் சுப்பிரமணியன் ஆகியோர் ஆய்வு செய்து கட்டிடப்பணிகளை விரைந்து முடிக்கும்படி உத்தரவிட்டனர். பின்னர் அமைச்சர் மூர்த்தி கூறியதாவது:பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளின் குறைகளை கேட்டறிந்து பால் உற்பத்தியை பெருக்க கறவை வாங்குவதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.
சிறப்பு திட்டமான ஆடு, மாடுகள் வழங்கும் திட்டம் போல் பால் உற்பத்தியை பெருக்க அண்டை மாநிலங்களிலிருந்து கறவை மாடுகள் வாங்கி கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. பால் உற்பத்தியில் வரும் வருமானத்தை கொண்டு உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு கூறினார். ஆய்வின் போது, கலெக்டர் விஜய்பிங்ளே, திருவண்ணாமலை நகராட்சி தலைவர் பாலசந்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## நவீன தொழில்நுட்பம்

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2012,00:00 IST



குறுகியகால நெல் ரகங்கள் - திருந்திய நெல் சாகுபடி நுட்பங்கள்: ஆடுதுறை 36: வயது 110 நாட்கள், எக்டருக்கு 6 டன் விளைச்சல். நடுத்தர சன்ன வெள்ளைநிற அரிசி, குருத்துப் பூச்சிக்கும் குலைநோய்க்கும் ஓரளவு எதிர்ப்புத்தன்மை, தமிழகமெங்கும் சாகுபடி.

**ஆடுதுறை 37**: வயது 105 நாட்கள், எக்டருக்கு 5-6 டன் விளைச்சல், குட்டை பருமனுடன் வெள்ளை நிற அரிசி, பூச்சி நோய்களுக்கு ஓரளவு எதிர்ப்பு சக்தி கொண்டது.

**ஆடுதுறை 42**: 115 நாட்கள், 6-6.5 டன் மகசூல், நீண்ட சன்ன வெள்ளைநிற அரிசி, சொர்ணவாரி, குறுவை, கார் பருவங்களுக்கு ஏற்றது. தமிழகமெங்கும் பயிரிடலாம்.

**ஆடுதுறை 43**: 105-110 நாட்கள், விளைச்சல் எக்டருக்கு 6000 கிலோ, மத்திய சன்ன வெள்ளை அரிசி.

**ஆடுதுறை 45**: 105-115 நாட்கள் வயதுடையது. மகசூல் 6000 கிலோ. மத்திய சன்ன அரிசி, 0.5 சதவீதம் முழு அரிசி காணும் திறனுடையது. ஆனைக்கொம்பனுக்கு எதிர்ப்புத்திறன் கொண்டது. புகையானுக்கும், குருத்துப்பூச்சிக்கும் மிதமான எதிர்ப்புத்திறன் கொண்டது.

**ஆடுதுறை 47**: 115-118 நாட்கள். மகசூல் 7 டன், மத்திய சன்ன வெள்ளை அரிசி, சொர்ணவாரி, கார், குறுவை, நவரை பட்டங்களுக்கு ஏற்றது. இலைக் கருகல், துங்ரோ நோய்க்கு எதிர்ப்புசக்தி கொண்டது.

**ஆடுதுறை 48:** 95 நாட்கள் வயதுடையது. மகசூல் 4.8 டன்/எக்டர். நீண்ட சன்ன வெள்ளை அரிசி, தண்ணீர் பற்றாக்குறை காலங்களில் நேரடி விதைப்பிற்கு ஏற்றது. தஞ்சை, நாகை மாவட்டங்களில் பின் குறுவைக்கு ஏற்றது. குருத்துப்பூச்சி, இலை மடக்குப்புழுவிற்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

**ஆடுதுறை வீரிய ஒட்டு**: வயது 115 நாட்கள். எக்டருக்கு 8 டன் மகசூல். நீண்ட சன்ன வெள்ளை அரிசி. வயல் நிலையில் குருத்துப்பூச்சி, இலை சுருட்டுப் புழுவிற்கு எதிர்ப்புத்திறன் கொண்டது.

**டி.கே.எம்.12**: 115-120 நாட்கள் வயது. காஞ்சிபுரம், திருவள்ளூர், விருதுநகர், ராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு ஏற்றது. ஜூலை - ஆகஸ்ட் - செப்டம்பர் ஆகிய மாதங்களில் மானாவாரியில் நேரடி விதைப்புக்கு ஏற்றது. வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. மகசூல் எக்டருக்கு 3 டன்.

**ஏ.எஸ்.டி.16 (அம்பை 16)**: 115 நாட்கள் வயதுடையது. விளைச்சல் 5.5 டன் / எக்டர். புகையானுக்கு எதிர்ப்புசக்தி கொண்டது.

**ஏ.எஸ்.டி.20 (அம்பை 20)**: வயது 110-115 நாட்கள். மகசூல் ஏக்கருக்கு 6-6.5 டன். நெல் நீண்ட சன்னம், அரிசி வெள்ளை, பல நோய்களுக்கும் பூச்சிகளுக்கும் எதிர்ப்பு சக்தி கொண்டது.

**மதுரை 5(என் டியு 5)**: வயது 95-100 நாட்கள். மகசூல் எக்டருக்கு 5 டன், நேரடி விதைப்புக்கு மிகவும் ஏற்றது. குறிப்பாக மதுரை, ராமநாதபுரம், நாகப்பட்டினம், விருதுநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் புழுதிக்கால் சாகுபடிக்கு ஏற்றது. நெல் நடுத்தர சன்னம். பல நோய்களையும் பூச்சிகளையும் தாங்கி வளரக்கூடியது. கார், குறுவை, சொர்ணவாரி, நவரை பட்டங்களில் பயிரிட ஏற்றது. நாற்று விட்டு நடுவதற்கும் ஏற்றது.


**பிஎம்கே (ஆர்) 4 (அண்ணா4)**: குறுகிய கால வறட்சியைத் தாங்கி வளரக்கூடியது. வயது 100-105 நாட்கள். நேரடி விதைப்பில் எக்டருக்கு 3.7 டன் மகசூல், மானாவாரியில் ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் நேரடி விதைப்புக்கு ஏற்றது.

**திருந்திய நெல் சாகுபடியின் முக்கிய நுட்பங்கள்**:

* 14 நாள் வயதுடைய வாளிப்பான நாற்றுக்களை நடுதல். * குத்துக்கு ஒரு நாற்று அதிக இடைவெளிவிட்டு சதுர நடவு (25 து 25 செ.மீ.). * ரோட்டரி, கோனோ வீடர் மூலம் களைகளை அமுக்கி சேற்றை கலக்குதல். * நீர் மறைய நீர் கட்டி பாசன நீரின் அளவைக் குறைத்தல். * பச்சை வண்ண அட்டை மூலம் தழைச்சத்தை நிர்வகித்தல். * ஒருங்கிணைந்த நெற்பயிர் நிர்வாகத்தில் அடிப்படை தேவையான வீரிய இளம் நாற்றுக்களை 14 நாட்கள் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய உழவியல் நுட்பங்களை அறிதல் (தகவல்: முனைவர் த.ஜெயராஜ், முனைவர் ரா.சரஸ்வதி, முனைவர். க.சோளன், தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம், ஆடுதுறை-612 101. போன்: 0435-247 2098)-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

## சிறுதொழில் துவங்க சிறுதானிய உணவுப்பண்டங்கள்

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2012,00:00 IST



அரிசி, கோதுமையைப் போலவே சிறு தானியங்களை உபயோகித்து வியாபார ரீதியில் பலவகையான உணவுப் பண்டங்களைத் தயாரிக்கலாம். ஆவியில் வேகவைத்து தயாரிக்கும் பண்டங்களான இடியாப்பம், புட்டு, கொழுக்கட்டை மற்றும் சோளமாவு, கேழ்வரகு மாவு, கம்பு மாவு, தினை மாவு போன்றவற்றிலிருந்து இனிப்பு வகைகளான அதிரசம், பணியாரம், லட்டு, கேசரி, பாயசம், சத்துமாவு உருண்டை மற்றும் புட்டிங் ஆகிய பண்டங்களைத் தயாரிக்கலாம். கார வகைகளான முறுக்கு பக்கோடா, அடை, உப்புமா மற்றும் அடுமனைப் பொருட்களான கேக், பிஸ்கட் மற்றும் ரொட்டி வகைகளையும் தயாரிக்கலாம்.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சிறுதானியங்களை அன்றாட உணவிலும் மதிப்புக்கூட்டி வியாபார

ரீதியாகவும் உபயோகப்படுத்தும்போது அவற்றின் தயாரிப்பு விலை குறைவது மட்டுமல்லாமல் ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பண்டங்கள் தயாரித்து விற்பனை செய்ய முடியும்.

**சிறுதானியங்களிலிருந்து இணை உணவு**: கோதுமை, சோளம், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு, திணை, வரகு, சாமை, குதிரைவாலி, பார்லி மற்றும் ஜவ்வரிசியோடு பாசிப் பயறு, கொண்டைக்கடலை, பாதாம், முந்திரி, ஏலக்காய் ஆகியவற்றைச் சேர்த்து இணை உணவு தயாரிக்கலாம். சிறுதானியங்கள் மற்றும் பயறுவகைகளை கல்நீக்கி சுத்தம் செய்து வெயிலில் காயவைத்து, 12 மணி நேரம் தண்ணீரில் ஊறவைத்து, ஈரத்துணியில் கட்டி மிதமான வெப்பநிலையில் 48 மணி நேரம் வைக்கவும். முளைத்த தானியங்கள் மற்றும் பயறுவகைகளை வெயிலில் நன்கு காயவைத்து, மிதமான சூட்டில் வறுக்கவும். இவ்வாறு தயார் செய்த தானியங்களை மில்லில் மாவாகத் திரிக்கும்பொழுது பாதாம், முந்திரி, ஏலக்காய் ஆகியவற்றை சேர்த்து மாவாக்கவும். தயாரித்த மாவை பாலிதீன் பை அல்லது டப்பாக்களில் சேமித்து தினமும் காலை நேரங்களில் குழந்தைகள், பருவப்பெண்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வயதானவர்களுக்கு கூழாக தயாரித்து கொடுக்கலாம்.

**சிறுதொழில் தொடங்கத் தேவை யானவை**: சிறுதானிய உற்பத்தியாளரே மதிப்பூட்டப்பட்ட சிறுதானிய உணவுப் பண்டங்கள் தயாரிக்கும் முறையை ஒரு குடிசைத் தொழிலாக மேற்கொண்டு வருவாயைப் பெருக்கலாம். அல்லது உற்பத்தியாளரிடமிருந்து சிறுதானியங்களை வாங்கி உணவுப் பண்டங்களை தயாரித்து விற்பனை செய்யலாம். தானே உற்பத்தி செய்து இத்தொழிலை மேற்கொண்டால் நல்ல லாபத்தைத் தரும். ஒரு கிலோ பலதானியக்கலவை பொடி தயாரிக்க ஆகும் செலவு ரூ.30-40 வரை ஆகும். கடையில் இதை ரூ.80 முதல் 120 வரை விற்பனை செய்யலாம். இந்த தொழிலுக்கு அதிக முதலீடு தேவையில்லை. குறைந்த முதலீட்டில் நிறைய லாபம் தரும் தொழில்களில் இது முதன்மையானது என்றே சொல்லலாம்.

**தொழில் துவங்க தேவையான பொருட்கள்**: ஊறவைக்க பாத்திரங்கள், வறுத்தெடுக்க வாணலி மற்றும் கரண்டிகள், மாவை சேமிக்க எவர்சில்வர் அல்லது பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வாளி, எடைபோடும் மிஷின், லேபிள் போட்ட பிளாஸ்டிக் கவர்கள், சீல் செய்ய கவர் போன்றவைக்கு ரூ.5000 முதல் ரூ.1000 வரை உள்ள முதலீடு போதுமானது. இத் தொழிலை பள்ளி, கல்லூரி, அலுவல கங்கள் போன்ற உணவகங்களிலும் நடத்தலாம். இத்தொழில் துவங்க மூலதனம் ரூ.10,000 தேவைப்படும். தினசரி சராசரியாக 1000 ரூபாய்க்கு பண்டங்கள் தயாரித்து விற்பனை செய்தால் மாதந்தோறும் ரூ.30,000க்கும் மேல் லாபம் கிடைக்கும். இவ்வாறு சிறுதானியங்களிலிருந்து மதிப்புக் கூட்டிய உணவுப் பண்டங்கள் தயாரித்து விற்பனை செய்து குடும்ப வருமானத்தைப் பெருக்குவதுடன் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கலாம்.

முனைவர் பெ.க.தேன்மொழி,உதவிப்பேராசிரியர்,முனைவர்

வெ.பழனிச்சாமி,இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் அறிவியல் நிலையம்,
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்,குன்றக்குடி-630 206.

## அதிக லாபத்தைக் கொடுக்கும் நெல் ரகத்தில் கூடுதல் லாபம் பெற புதிய முயற்சி

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2012,00:00 IST



ஐதராபாத்தில் செயல்பட்டு வரும் "டைரக்டரேட் ஆப் ரைஸ் ரிசர்ச்' என்னும் நிலையம் புதிய உயர் விளைச்சல் நெல் ரகமாகிய "ஆர்.பி. பயோ 226' வெளியிட்டுள்ளது. இதன் அரிசியின் குணம் மிகவும் சிறப்பாக உள்ளது. அரவையில் 70 சதவீத அரிசி கிடைக்கின்றது. உடையாத பச்சரிசி 65 சதவீதம் கிடைக்கின்றது. நுகர்வோர்கள் இந்த அரிசியை அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக இருக்கின்றனர். இந்த ரகத்தை இந்தியாவில் நெல் சாகுபடி செய்யும் பல இடங்களில் சாகுபடி செய்து பார்த்ததில் எல்லா இடங்களிலும் விவசாயிகள் நுகர்வோர்கள் இவர்களை முழுமையாக திருப்தி செய்துள்ளது.

புதிய ரகத்தில் பேக்டீரியல் இலைக்கருகல் நோய் தாக்குவது இல்லை. இதன் வயது 135 - 140 நாட்களாக உள்ளது. நம் பகுதியிலும் இந்த புதிய நெல் ரகத்தை சாகுபடி செய்யலாம். இதன் மகசூல் திறன் ஏக்கருக்கு 2 - 2.5 டன்னாகும். மிக சன்ன அரிசி கொண்டது. நல்ல சமைக்கும் தன்மை கொண்டது. தமிழகத்தைச் சேர்ந்த விவசாயி எஸ்.சுந்தரம் (43, கடைவீதி, திருக்காட்டுப்பள்ளி-613 104, தஞ்சாவூர் மாவட்டம்) புதிய ரகத்தை தாளடி பட்டத்தில் சாகுபடி செய்து நல்ல பலன் அடைந்துள்ளார். வழக்கமாக செய்யும் சாகுபடியில் எடுக்கும் லாபத்தைவிட பல மடங்கு அதிகமான லாபத்தை அடைய வேண்டுமென்று திட்டமிட்டு செயலில் இறங்கினார். இவர் முதலில் சாதாரண முறையில் (நாற்று விட்டு நடும் முறை) சாகுபடி செய்தால் என்ன

செலவாகும் என்பதை தெரிந்துகொண்டார். சாதாரண முறையில் ஒரு ஏக்கரில் ஆகும் செலவு ரூ.16,850 என்று புரிந்துகொண்டார். சாகுபடி செலவை புதிய முறையை அனுசரித்து ரூ.13,275 ஆக குறைத்தார். புதிய முறையை (கருவி நடவு முறை) அனுசரித்ததால் ஏக்கருக்கு ரூ.3,575 மிச்சமானது. இதனால் புதிய ரகத்தில் நிகர லாபமானது கணிசமாக அதிகரித்தது. அதிக லாபத்தை எடுக்க விவசாயி கருவி நடவு முறையை அனுசரித்தார். கருவி நடவு முறையில் செலவு கீழ்க்கண்டபடி ஆனது.ரூ.விதை 15 கிலோ - 375

டிரே விதைப்பு - 200

உழவு டிராக்டர் - 900

பரம்படித்தல் - 200

டிரே எடுத்துச்செல்ல செலவு - 200

நடவு - 800

வரப்பு வெட்ட - 300

அடி உரம் - 1,200

உரம் தெளிக்க - 100

ஜிங்க் சல்பேட் - 200

களைக்கொல்லி - 200

களைக்கொல்லி ஜிங்க் சல்பேட் தெளிக்க - 100

கோனோவீடர் தள்ள 3முறைக்கு - 1,000

இரண்டு களையெடுக்க - 500

பூச்சிமருந்து மூன்று முறை - 1,000

பூச்சி மருந்து அடிக்க 3 முறை - 400

தண்ணீர் பாசனம் காவல் - 2,000

அறுவடை மிஷின் - 2,000

டிராக்டர் டிப்பர் - 600

நெல் வீட்டிற்கு எடுத்துச்செல்ல - 1,000

கருவி நடவு முறையில் மொத்த செலவு - 13,275

சாதாரண நடவுமுறையில் மொத்த சாகுபடி செலவு - 16,850

கருவி நடவு முறையில் ரூ.3,575 செலவு குறைந்துவிடுகிறது. ஆதலின் எதிர்காலத்தில் சாகுபடி செலவை குறைத்து மிக அதிகமான லாபத்தை அடைய விவசாயிகள் கருவிகொண்டு நாற்று நடும் முறையை அனுசரிக்க வேண்டும்.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

## கரும்பு விவசாயிகளுக்கான முத்தரப்பு கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2012,01:26 IST

அரியலூர்: அரியலூர் மாவட்டத்தில் கரும்பு விவசாயிகள் நலனை மேம்படுத்துவதற்கான முத்தரப்பு கூட்டம் நடந்தது.

அரியலூர் மாவட்டத்தில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏற்படும் பிரச்சனைகளை கேட்டறிந்து தீர்வு காண்பதற்காக, கரும்பு விவசாயிகள், சர்க்கரை ஆலை நிர்வாக அலுவலர்கள் மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் பங்கேற்ற முத்தரப்பு கூட்டம், அரியலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில், டி.ஆர்.ஓ., பூங்குழலி தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குநர் சேகர் முன்னிலை வகித்தார்.

கரும்பு சாகுபடியில் ஏற்படும் பிரச்சனைகள், விவசாயிகளுக்கு வெட்டுக்கூலியை உயர்த்தி வழங்குவது, உரிய காலத்தில் கரும்பு சாகுபடிக்கு உரம் வழங்குவது, 12 மாதத்துக்குள் கட்டிங் ஆடர் வழங்கி கரும்பை கொள்முதல் செய்வது உள்ளிட்ட பிரச்சனைகள் பற்றி, விவசாயிகள் தரப்பில், செங்கமுத்து, மணி, முருகையன், கலைமணி, முருகேசன் கண்ணையன், செந்தில்நாதன் உள்ளிட்டோர் பேசினர்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிளித்து, சாத்தமங்கலம் கோத்தாரி சக்கரை ஆலையின் தலைமை கரும்பு அலுவலர் ராஜு, துணை கரும்பு அலுவலர் கார்த்திகேயன், அம்பிகா சுகர்ஸ் மேலாளர் அன்புச்செல்வன் உள்ளிட்டோர் பேசினர்.

டி.ஆர்.ஓ., பூங்கொடி பேசியதாவது: அரியலூர் மாவட்டத்தில் இரண்டு சர்க்கரை ஆலைகள் உள்ளன. விவசாயிகளின் தனிப்பட்ட கோரிக்கைகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, சக்கரை ஆலை நிர்வாகிகள் உடனுக்குடன் தீர்வு காண வேண்டும். கரும்பு விவசாயிகளின் உணர்வுக்கு மதிப்பளித்து, அவர்கள் வழங்கும் கரும்பு டன் ஒன்றுக்கு அரை கிலோ சக்கரை வழங்குவது பற்றி, ஆலை நிர்வாகம் உணர்வு ரீதியாக தீர்மானித்து முடிவெடுக்க வேண்டும்.

கிராமங்களில் ஒரு சில இடங்களுக்கு சாலை வசதி வேண்டும் என, இங்கு கரும்பு விவசாயிகள் சிலர் பேசினர். அதுபற்றி தனியாக மனு கொடுத்தால், அவற்றின் மீது மாவட்ட கலெக்டர் உரிய நடவடிக்கை ஏதுவாக இருக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் கோத்தாரி சக்கரை ஆலையின் சீனியர் மேனேஜர் வெங்கடேச பெருமாள், துணை

மேலாளர் ரவிக்குமார், மேலாளர் குமார், செந்துறை வேளாண்மை உதவி இயக்குநர் ராஜசேகரன், வேளாண்மை அலுவலர்கள் சுகந்தி, அருள்ராஜ், ராஜாங்கம், ராஜேந்திரன், துணை வேளாண்மை அலுவலர்கள் அப்பாவு, பொய்யாமொழி, காசிநாதன், சொக்கலிங்கம், உலகநாதன், ராமலிங்கம் மற்றும் கரும்பு விவசாயிகள் பலரும் பங்கேற்றனர்.

**துல்லிய பண்ணை அமைத்தால்இலவச சொட்டு நீர் பாசனம் உண்டு**

பதிவு செய்த நாள் : ஜுலை 04,2012,01:13 IST

திண்டுக்கல்:தோட்டக்கலைத்துறையின் சார்பாக துல்லிய பண்ணையம் மூலம் அமைக்க விவசாயிகளுக்கு இலவச சொட்டு நீர் பாசனம் அமைத்து தரப்பட உள்ளது.
விவசாய இணை இயக்குனர் சம்பத்துகுமார் கூறியதாவது: இலவச சொட்டு நீர் பாசனத்திற்கு 1040 எக்டேர் நிலத்தில் செய்வதற்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு ரூ.15,000ம் மதிப்பிலான உரங்களும், ரூ.5,000 மதிப்பிலான விதைகளும் வழங்கப்பட உள்ளது. சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் அமைப்பதற்கு தாசிதல்தார் சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

**பூ விவசாயத்தில் நீர் மேலாண்மை**

பதிவு செய்த நாள் : ஜுலை 04,2012,01:04 IST

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு பகுதியில் பூ சாகுபடியில் நீர் மேலாண்மை மூலம் பாசனத்தை முறைப்படுத்தி, விவசாயிகள் பூ உற்பத்தியில் சாதனை படைத்து வருகின்றனர்.
நிலக்கோட்டை தாலுகாவில் பூ விவசாயம் அதிக பரப்பளவில் நடந்து வருகிறது. வத்தலக்குண்டு அருகே உள்ள செங்கட்டாம்பட்டி,சாலைபுதூர், நல்லாம்பிள்ளை,வீரசிக்கம்பட்டி,சேவுகம்பட்டி கிராமங்களில் சம்பங்கி,கனகாம்பரம்,மல்லிகை பயிரிடுகின்றனர்.

தமிழக அரசு இரண்டாம் பசுமை புரட்சி திட்டம் மூலம் விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்களை கடைபிடிக்க வலியுறுத்தி வருகிறது. முதற்கட்டமாக உழவர் திருவிழா மாநிலம் முழுவதும் நடந்து முடிந்துள்ளது. அதன் எதிரொலியாக செங்கட்டாம்பட்டி பகுதி விவசாயிகள் நீர் மேலாண்மையை கடைபிடிக்க துவங்கி உள்ளனர். இதன் மூலம் பாசனத்தை முறைப்படுத்தி,பூ சாகுபடியில் சாதனை படைத்து வருகின்றனர். நீர் அதிகமாக தேவைப்படும் சம்பங்கி சாகுபடியிலும் தெளிப்பான்(ஸ்பிரிங்க்லர்) மூலம் பாசனம் செய்கின்றனர்.விவசாயி

தாமோதரன் கூறுகையில்,"உழவர் திருவிழா நடந்த போது நீர் மேலாண்மை குறித்து அதிகாரிகள் விளக்கினர். ஒரு ஏக்கருக்கு 40 ஆயிரம் ரூபாய் செலவில் நீர் தெளிப்பான் மூலம் விவசாயம் செய்கிறேன். இதனால் நேரம்,நீர்,ஆள் தேவை குறைகிறது. மின் தட்டப்பாட்டையும் சமாளிக்க முடிகிறது', என்றார்.

## இறால் விலை வீழ்ச்சி விவகாரம்:முடிவு எடுக்காமல் முடிந்த கூட்டம்

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,23:13 IST

ராமேஸ்வரம்: இறால் மீன் விலை வீழ்ச்சியினால் ராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற ஸ்டிரைக்கில் ஈடுபட்டுள்ளனர்.இந்நிலையில் ராமேஸ்வரம் தாலுகா அலுவலகத்தில் மீனவப்பிரதிநிதிகள், மீன் ஏற்றுமதி நிறுவனத்தினரின் கூட்டம் நடந்தது.
ராமநாதபுரம் ஆர்.டி.ஓ. முத்துக்குமரன் தலைமையில் நடந்த கூட்டத்தில் ராமேஸ்வரம் தாசில்தார் தர்மராஜன், மீன்துறை உதவி இயக்குனர் கார்த்திகேயன், மீனவர் பிரதிநிதிகள் சமத்துவம், தேவதாஸ், போஸ், சுடலைக்காசி, எமரிட், மற்றும் இறால் மீன் ஏற்றுமதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். ஜப்பானில் மார்க்கெட் இல்லாத நிலையில் இறால் ஏற்றுமதி குறைந்துள்ளதால், அங்கிருந்து கொண்டு வரப்படும் இறால்களின் எடை மற்றும் எண்ணிக்கையை மையப்படுத்தித்தான் விலை நிர்ணயம் செய்யமுடியும். முன்பே விலை நிர்ணயம் செய்ய முடியாது என்று ஏற்றுமதி நிறுவன பிரதிநிதிகள் தெரிவித்தனர். இதையடுத்து எவ்வித முடிவும் எடுக்கப்படாத நிலையில் கலெக்டரின் தலைமையில் அடுத்த கூட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதுவரை ஸ்டிரைக் தொடரும் என, மீனவ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

## கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணிக்கு பதிவு மூப்பு விபரம்

பதிவு செய்த நாள் : ஜூலை 03,2012,23:14 IST

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடத்திற்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பதிவு மூப்பு விபரம் வெளியிடப்பட்டுள்ளது. எட்டாம் வகுப்பு தேர்ச்சி, அல்லது பத்தாம் வகுப்பு தோல்வியுற்றவராக இருக்கலாம். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 18-35 வயதும், மிகவும் பிற்பட்டோர் மற்றும் பிற்பட்டோர் 18-32 வயதும், பொது பிரிவினர் 18-30 வயதும் நிரம்பி இருக்க வேண்டும். விதிமுறைபடி வயது வரம்பில் தளர்வு உண்டு. பெண்களில் பிற்பட்டோர் முஸ்லிம் முன்னுரிமையுள்ளவர்கள் அனைவரும், பிற்பட்டோர் முன்னுரிமையற்றவர்கள் 3.7.1990 வரை.

பிற்பட்டோர் மாற்றுத்திறனாளிகள் 24.1.1996 வரை, மிகவும் பிற்பட்டோர் மாற்றுத்திறனாளிகள் 15.9.1994 வரை. பொது பிரிவினரில் முன்னுரிமையற்றவர்கள் 10.7.1989 வரை, பொதுப்பிரிவினர் மாற்றுத்திறனாளிகள் 25.5.1992 வரை.பொது பிரிவில், பிற்பட்டோர் முன்னுரிமையுள்ளவர்கள்(ஆதரவற்ற விதவை) அனைவரும் 15.6.2009 வரை.

மிகவும் பிற்பட்டோர் முன்னுரிமையுள்ளவர்கள் (ஆதரவற்ற விதவை) 30.9.2011 வரை, பொது பிரிவினர் முன்னுரிமையுள்ளவர்கள் (ஆதரவற்ற விதவை) 19.5.2006 வரை, ஆதி திராவிடர் மற்றும் அருந்ததியினர் முன்னுரிமையுள்ளவர்கள் 8.8.2008 வரை. ஆதி திராவிடர் மற்றும் அருந்ததியினர் மாற்றுத்திறனாளிகள் 30.6.1993 வரை, பொது பிரிவினர் முன்னுரிமையற்றவர்கள் 24.10.1986 வரை, பொது பிரிவினர் மாற்றுத்திறனாளிகள் 19.1.1988 வரை.தகுதி உடையவர்கள், ராமநாதபுரம் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு இம்மாதம் 6ம் @ததிக்குள், பதிவு அட்டை மற்றும் அனைத்து சான்றிதழ்களுடன் நேரில் சென்று பரிந்துரைக்கப்பட்ட விபரத்தை தெரிந்து கொள்ளலாம்.

## வரத்து குறைவால் மாம்பழம் விலை உயர்வு

பதிவு செய்த நாள் : ஜூலை 04,2012,00:11 IST

ராஜபாளையம்:ராஜபாளையத்தில் வரத்து குறைந்ததால், மாம்பழம் கிலோ 50, 60 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.
மேற்கு தொடர்ச்சி மலையடிவாரம் ராஜபாளையம் மற்றும் சுற்றுபுறங்களில் பல எக்டேரில் மாந்தோப்புகள் உள்ளன.
இங்கு சப்பட்டை, பஞ்சவர்ணம், வகை மாங்காய் விளைச்சல் அதிகம். பங்குனியில் மாம்பழ சீசன் துவங்கியது. அப்போது பஞ்சவர்ணம் 25, சப்பட்டை 30 ரூபாய்க்கு விற்பனை ஆனது.
பின் ஐந்து ரூபாய் வீதத்தில் உயர்ந்துகொண்டே சென்றது.
கடைசியில் 35, 40 ரூபாய் என பலநாள்கள் இருந்தது.
தற்போது சீசன் முடியும் காலம் என்பதால், மாங்காய் வரத்து குறைந்தது.
மாம்பழம் விலை மேலும் உயர்ந்து, சப்பட்டை 60, பஞ்சவர்ணம் 50 ரூபாய் என விற்கப்படுகிறது.

தினகரன்

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-07-03 12:34:18

காஞ்சிபுரம், :காஞ்சிபுரம் கலெக்டர் ஹனீஸ் சாப்ரா வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள ஊரக வளர்ச்சி திட்ட முகமை கூட்ட அரங்கில் இன்று (3ம்தேதி) காலை 11 மணிக்கு நடக்கிறது. இதில், விவசாயத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றனர். எனவே, விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## மாங்கனி கண்காட்சியில் விவசாயிகள் கருத்தரங்கம்

பதிவு செய்த நேரம்:2012-07-03 10:15:46

கிருஷ்ணகிரி, :  கிருஷ்ணகிரியில் 20வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடந்து வருகிறது. கண்காட்சியின் 9வது நாளான இன்று (3ம் தேதி) மாலை 4 மணி முதல் 5 மணி வரை மீன் வளர்ச்சித்துறை சார்பில் விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெறுகிறது. மாலை 5 மணி முதல் 6 மணி வரை கிருஷ்ணகிரி ரோட்டரி மெட்ரிக் பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடைபெறுகிறது. மாலை காவியத் தலைவி கலைக் குழு நாடக நிகழ்ச்சி நடைபெறுகிறது. சங்கீதா ஆர்ட்ஸ் கலைக்குழு நாடகம் நடைபெறுகிறது. குரு ராகவேந்திரா குவினரின் சிலம்பாட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது. ட்ரம்ஸ் மைக்கேல் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது. அருண் ஆர்கெஸ்ட்ரா  குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெறுகிறது.

## விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் எம்எல்ஏக்கள் வழங்கினர்

பதிவு செய்த நேரம்:2012-07-03 11:41:26

ஜோலார்பேட்டைஜோலார்பேட்டை வட்டார வேளாண் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு அதிவிரைவு பயிர் உற்பத்தி திட்டத்தின் மூலம் இடுபொருட்கள் வழங்கும் விழா சின்னமோட்டூர் கிராமத்தில் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கே.சி.வீரமணி எம்எல்ஏ தலைமை தாங்கினார். முகாமில் 150 விவசாயிகளுக்கு 2012-13ம் ஆண்டிற்கான அதிவிரைவு பயிர் உற்பத்திக்கான இடுபொருட்கள் வழங்கப்பட்டது. இதில் திருப்பத்தூர் எம்எல்ஏ கே.ஜி.ரமேஷ் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விதைகள், உரம், பூச்சி மருந்து, களைக்கொல்லி ஆகியவைகளை வழங்கினார்.வேளாண் உதவி இயக்குனர் அ.ராதா மற்றும் வேளாண் துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பருவமழை பெய்யாததால் கண்மாய், குளங்களில் கடும் வறட்சி

பதிவு செய்த நேரம்:2012-07-03 11:58:37

காளையார்கோவில், : பருவ மழை பெய்யாததால் காளையார்கோவில் பகுதியில் கண்மாய்கள், குளங்கள் வறண்டு காணப்படுகின்றன.
காளையார்கோவில் ஒன்றியத்தில் 500க்கும் மேற்பட்ட கண்மாய்கள், குளங்கள் உள்ளன. பெரும்பாலான ஊர்களில் உள்ள குளங்களுக்கு தண்ணீர் வரும் வரத்து கால்வாய்கள் அனைத்தும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதனால் கண்மாய்கள் மட்டுமே நீர் ஆதாரமாக விளங்கி வருகின்றன. இப்பகுதியில் கடந்த ஆண்டு ஓரளவு மழை பெய்ததால் பெரும்பாலான குளங்கள், கண்மாய்களில் போதிய அளவு நீர் காணப்பட்டது. ஒன்றியத்தில் உள்ள கண்மாய்களின் மூலம் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.மேலும் கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயரவும், கால்நடைகளின் தேவைக்கும் கண்மாய் நீர் பயன்பட்டு வருகிறது.
இந்நிலையில் இந்த ஆண்டு கடந்த 3 மாதங்களாக கடும் வெயில், பருவமழை தாமதம் உள்ளிட்ட காரணங்களால் காளையார்கோவில் ஒன்றியத்துக்க உட்பட்ட அனைத்து கண்மாய்களும், குளங்களும் வறண்டு காணப்படுகின்றன. இதனால் நிலத்தடி நீர்மட்டமும் வெகுவாக குறைந்து வருகிறது.சிவகங்கை மாவட்டத்தில் பெரிய கண்மாய் என அழைக்கப்படும் மறவமங்கலம் கண்மாய் முற்றிலுமாக வறண்டு காணப்படுகிறது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர். மறவமங்கலம் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில், “கோடை விவசாயத்திற்கு போதுமான அளவு தண்ணீர் இல்லாவிட்டாலும், குறைந்த அளவு தண்ணீர் இருந்தால் மற்ற தேவைகளுக்கு பயன்படுத்தலாம். ஆனால் தொடர்ந்து அடித்த கடுமையான வெயிலால் மிக விரைவாக கண்மாய்கள், குளங்கள் வறண்டுவிட்டன.

பருவமழை பெய்தால் மட்டுமே தண்ணீருக்கு அலையும் அவலம் தீரும். கண்மாய் வறண்டு விட்டதால் இப்பகுதியில் உள்ள கிணறுகளிலும் நீர்மட்டம் குறைந்து வறண்டு வருகின்றன. இப்பகுதி கண்மாய் மற்றும் குளங்களுக்கு வரும் நீர்வரத்து பாதைகளில் ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்ற வேண்டும். அனைத்து நீர்வரத்து பாதைகளையும் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்றனர்.